www.Padasalai.Net www.CBSEtips.in

# 7 - ஆம் வகுப்பு இரண்டாம் இடைப்பருவத் தேர்வு – 2022

காலம் : 1.30 மணி | **தமிழ்** | மதிப்பெண்கள் : 50

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 10 X 1 = 10

***அ) பொருள் கூறுக.***

1. வங்கூழ்
2. கழனி

***ஆ) சேர்த்து எழுதுக.***

3. ஏடெடு + தேன்
4. உயர் + அடைவோம்

***இ) பிரித்து எழுதுக.***

5. கட்டியடித்தல்
6. எழுத்தாணி

***ஈ) பொருத்துக.***

7. நிகர் – சோறு
8. பரிதி – கப்பலைச் செலுத்துபவர்
9. இயற்சொல் – சமம்
10. மீகாமன் – கதிரவன்

**II சரியான விடையைத் தேர்ந்தெடு.** 5 X 1 = 5

11. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ............... .
    அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு
12. எல்லோர்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ........... .
    அ) திரிசொல் ஆ) இயற்சொல் இ) திசை சொல் ஈ) வடசொல்
13. பெண்களுக்கு நிகராகப் பாரதி தாசன் கூறுவது .......... .
    அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்
14. மயிலும், மானும் வனத்திற்கு ............... தருகின்றன.
    அ) களைப்பு ஆ) வனப்பு இ) மலைப்பு ஈ) உழைப்பு
15. மிளகாய் வற்றலின் ..................... தும்மலை வரவழைக்கும்.
    அ) காட்சி ஆ) நெடி இ) மணம் ஈ) ஓசை

**III கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் மூன்று வரிகளில் விடையளி.** 5 X 2 = 10

16. கேலிச் சித்திரம் என்றால் என்ன?
17. தீமை உண்டாகும் இரண்டு செயல்களை எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner

18. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக, அகநானூறு கூறுகிறது?
19. கப்பலின் உறுப்புகள் சிலவற்றைக் கூறு.
20. சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
21. கல்வியறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
22. கீரைப்பாத்தியும், குதிரையும், எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

**IV அடிபிறழாமல் எழுதுக.** 3 + 2 = 5

23. "வைப்புழிக்கோட்படார்" எனத் தொடங்கும் அழியாச் செல்வம் பாடலை எழுதுக.
24. "ஊறும் அறிவு" என முடியும் திருக்குறளை எழுதுக.

**V கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஆறு வரிகளுக்கு மிகாமல் எழுதுக.** 3 X 3 = 9

25. விகாரம் எனப்படுவது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக. ***(அல்லது)***
26. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை? விளக்குக.
27. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும். ***(அல்லது)***
28. கல்வியே அழியாத செல்வம் விளக்குக,
29. இன்பத்தமிழ்க் கல்வி – பாடல் பொருள் எழுது? ***(அல்லது)***
30. "எழுது" என்ற வேர்ச் சொல்லுக்கு, நிகழ்காலம், இறந்த காலம், எதிர்க்காலம் என்ற மூன்று காலங்களில் எப்படி வரும்?

**VI கீழ்க்காணும் வினாவிற்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.** 1 X 5 = 5

31. எங்கள் ஊர் என்ற தலைப்பில் கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. (முன்னுரை, இருப்பிடம், தொழில்கள், சிறப்பான இடம் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை) ***(அல்லது)***
32. உங்கள் ஊர்ப்பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுது.

**VII கீழ்க்காணும் மொழிப் பயிற்சி வினாக்களுக்கு விடையளி.** 6 X 1 = 6

33. ஓரெழுத்து சொற்கள் இரண்டு எழுது?
34. சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.
    ................ ஏழாம் வகுப்பு மாணவர்கள். (நான், நீ, நாங்கள்)
35. "கண்" என்ற சொல் பண்புப் பெயரா? சினைப்பெயரா? இடப்பெயரா?
36. "செல்வம்' என்ற சொல்லை சொற்றொடரில் அமைத்து எழுதுக.
37. "முத்தமிழ்" தொகைச் சொல்லை விரித்து எழுதுக.
38. எழுத்துக்கள் ஒலிக்கும் கால் அளவு .................. எனப்படும்?
    (அளபெடை, மாத்திரை, இலக்கணம்)



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner